(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

126—

நூலகம்

***57401—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்**:

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், ராஜக்காபட்டி ஊராட்சி, குமாரபாளையத்தில் புதிய நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், ராஜக்காபட்டி ஊராட்சி, குமாரபாளையத்தில் புதிதாக நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தால், இந்த ஆண்டு நூலகம் அமைக்க இயலவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை

2020 மார்ச் 19]

வணங்குகிறேன். இனமான பேராசிரியர் அவர்களையும், எங்கள் இயக்கத் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், ராஜக்காபட்டி ஊராட்சி, குமாரபாளையத்தில் புதிய நூலகம் அமைத்துத்தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதியில் 6 கிளை நூலகங்கள், 8 ஊரக நூலகங்கள், 14 பகுதி நூலகங்கள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல, நூலகம் அமைக்க வேண்டுமென்றால் 5 சென்ட் நிலம் தேவை. தற்காலிகமாக நூலகம் அமைக்க வேண்டுமென்றால், வாடகையில்லாக் கட்டடம் தருவாரேயானால், அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான 5 சென்ட் இடவசதி இருக்கிறது. இல்லையென்றாலும் கட்டடம் வாடகையின்றி தரத் தயாராக உள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஊராட்சி ஒன்றியம், முல்லையூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் சுமார் 540 மாணவர்கள் படிக்கின்றார்கள். இவர்கள் நத்தத்திற்கு வரவேண்டுமென்றால் 9 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டியுள்ளது. 2018 ஆம் ஆண்டு பள்ளியைத் தரம் உயர்த்துவதற்காக பணம் கட்டியுள்ளார்கள். எனவே, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். மேலும், நத்தம் ஒன்றியம், பிள்ளையார்நத்தம் ஊராட்சி, பிள்ளையார்நத்தத்தில் சுமார் 350 முதல் 400 மாணவர்கள் வரை படிக்கின்றனர். இதற்கும் 2018 ஆம் ஆண்டில் பணம் கட்டியுள்ளார்கள். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள் மேல்நிலைப் பள்ளி உள்ள

செந்துறைக்கு வரவேண்டுமென்றால், சுமார் 12 கிலோ மீட்டர் தூரம் வரை வர வேண்டியுள்ளது.

நத்தம் ஊராட்சி ஒன்றியம், வேலம்பட்டி ஊராட்சியில், சேரூவீடு பள்ளியில் சுமார் 200 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி தர 2016 ஆம் ஆண்டில் பணம் கட்டியுள்ளர்கள். அதையும் இந்தக் கல்வி ஆண்டிலேயே தரம் உயர்த்தித் தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளையார்நத்தம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையும், அதேபோல், வேலம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றும் உறுப்பினரால் இரண்டு கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10–05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பள்ளிகளையும் தரமுயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு, 5 கிலோ மீட்டர் தூரம் மற்றும் அதிலே மாணவர்கள் 50 பேர் இருப்பார்களேயானால், அதுபற்றி அரசு பரிசீலித்து, கவனமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பள்ளிகளையும் தரம் உயர்த்த தேர்வு செய்ய வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். அதில் எந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கடிதங்கள் தருவார்களேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு அது எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் ஒன்றியம், கோவடி ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளி 2005 ஆம் ஆண்டு முதல் தரமுயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளியாக இயங்கி வருகிறது. அந்தப் பள்ளியில் 110 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். அனைத்துப் பாடங்களுக்கும், அதாவது, தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்ற பாடங்களுக்கும் தலைமை ஆசிரியர் உள்பட அனைத்து ஆசிரியப் பெருமக்களும் இருக்கின்றார்கள். ஆனால், இந்த உயர்நிலைப் பள்ளிக்கென்று ஒரு தனி கட்டட வசதியே இல்லை. அங்குள்ள ஆரம்பப் பள்ளியின் துணை நிலைக் கட்டடத்தில்தான் அந்த உயர்நிலைப் பள்ளியே இயங்கி வருகிறது. 110 மாணவர்கள் என்பதால் அங்கு போதுமான இட வசதி இல்லை. அதனால், மரத்தடியிலும், தரையிலும் அமர்ந்து மாணவர்கள் கல்வி பயின்று வரக்கூடிய ஓர் அவலநிலை இருந்து வருகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பள்ளியை நேரடியாக ஆய்வு செய்தால்கூட மிக நன்றாக இருக்குமென்று நான் நினைக்கின்றேன். குறிப்பாக, அந்த மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது, ஆசிரியர்கள் அமருவதற்கான இட வசதியும் கிடையாது, அந்த ஆரம்பப் பள்ளியில் எந்தவிதமான சுற்றுச் சுவரும் கிடையாது. ஆக, அனைத்து வசதிகளுடன்கூடிய ஓர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைக் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, அந்த நிலைமை தமிழ்நாட்டிலே இருக்கக் கூடாது என்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதற்காகவே நிதியினை அள்ளித் தந்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுகூட நபார்டு திட்டத்தின் மூலமாக 273 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்

பிறகு, ஏறத்தாழ 952 கோடி ரூபாய் அளவுக்கு நிதியினை ஒதுக்கி ஒரு வரலாறு படைத்திருக்கிற அரசாக நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் பவனி வந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நினைவிலே வைத்து, உடனடியாக நபார்டு திட்டத்தின் மூலமாக அங்கு புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு இந்த ஆண்டு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

127—

துணை மின் நிலையம்

***35122—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம், குத்தியாலத்தூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம், குத்தியாலத்தூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் எங்கேயாவது தனியார் இடத்தை மாண்புமிகு உறுப்பினர் வாங்கிக் கொடுப்பாரேயானால் நடவடிக்கை எடுக்கப்படும்; நிலம் கண்டறியப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைக்கப்படும்.